# கோயில் அமைப்பும் உறுப்புகளும்

⇒ கோயில் கட்டிட அமைப்பை பற்றியும் அவற்றின் உறுப்புக்களைப் பற்றி ஆகம நூல்களிலும் சிற்ப சாஸ்திரங்களிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

⇒ இந்நூல் கட்டடக் கலையின் பொதுவான செய்திகளை மேலோட்டமாகக் கூறுகிறபடியால், அவற்றை பற்றிய விரிவான செய்திகளை இங்குக் கூறவில்லை முக்கியமான சிலவற்றை சுருக்கமாகக் கூறுவோம்

⇒ கோயில் கட்டடத்தில் ஆறு உறுப்புகள் உண்டு.

அவை :-

1. முடி
2. தலை
3. கழுத்து
4. தோள்
5. உடல்
6. அடி

— என்பவை ஆகும்.

CPA College

# கோயில் அமைப்பும் உறுப்புகளும்



இந்தப் பெயர்களுக்கு சிற்ப நூலில் வேறு பெயர்கள் கூறப்படுகின்றன. அவை:

1. அதிஷ்டானம்
2. பாதம்
3. மஞ்சம்
4. கண்டம்
5. பண்டிகை
6. ஸ்தூபி

என்பவை வேறு பெயர்கள் ஆகும்.

1.) அடி அல்லது தரை அமைப்பு. இதற்கு "அதிஷ்டானம், மசூரகம், ஆதாரம், தலம், பூமி முதலிய பெயர்கள் உண்டு.

2.) உடல் அல்லது கருவறை: இதற்கு கால், பாதம், ஸ்தம்பம், கம்பம் முதலிய பெயர்கள் சிற்ப நூலில் கூறப்படுகிறது.

3.) தோள் அல்லது தளவரிசை: இதற்கு பிரஸ்தரம், மஞ்சம், கபோதம் முதலிய பெயர்கள் உள்ளன.

4.) கழுத்து :- இதற்கு "கண்டம், களம், கர்ணம் முதலிய பெயர்கள் உண்டு.

5.) தலை அல்லது கூரை: இதற்கு பண்டிகை, சிகரம், மஸ்தகம், சிரம் முதலிய பெயர்கள் உள்ளன.

6.) முடி அல்லது கலசம்: இதற்கு ஸ்தூபி. சிகை, கோளம் முதலிய பெயர்கள் உண்டு.

CPA College